2005 ஏப்ரல் 13]

354—

ஆரம்ப சுகாதார நிலையம்

***38525—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம், தெக்கலூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் நடப்பாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், தெக்கலூர் கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

திரு. எஸ். மகாலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய எண்ணங்கள், புதுப்புது ஆராய்ச்சிகள், கால வேகத்தை ஒட்டிய கருத்து மாற்றங்கள் என மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சிந்தனை எனும் பூங்காவினில் தென்றலென வீசி தெளிவும் தெம்பும் பிறந்திட வழி அமைப்போம், நல்லவர்கள் வாரீர்! வாரீர்! இதுவே நமது வேலை என பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்பால் அக்கறை கொண்டு, நடப்பு நிதியாண்டில் ரூ.597.15 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவி பெற்று தமிழ்நாட்டில் சுகாதாரப் பணிகள் திட்டத்திற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை இல்லாத பெரு முயற்சியாக 29 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளையும், 241 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளையும் உள்ளடக்கிய மொத்தம் 270 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள். இது இந்தியாவிலேயே ஒரு முதன்மையான முன்னோடித் திட்டமாகும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அவினாசி தொகுதி, தெக்கலூர் ஊராட்சியில் சுமார் 7,500–க்கும் மேற்பட்ட மக்கள்

வசித்து வருகிறார்கள். அங்கு, கர்ப்பிணிப் பெண்கள், பேறுகால தாய்மார்கள், பிரசவ வலி ஏற்பட்டாலோ அல்லது பொது மக்களுக்கு திடீர் தலைவலி, காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட்டாலோ அதிக தொலைவில் உள்ள கோயம்புத்தூர் அல்லது திருப்பூர் செல்ல வேண்டியிருப்பதால் தெக்கலூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த தெக்கலூர் ஊராட்சியினுடைய மக்கள்தொகை 969. அதுமட்டுமல்லாமல், நம்பியான்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 9 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அவினாசி அரசு மருத்துவமனை 9 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருத்துக்கேற்ப நல்ல கருத்தை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 355, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

355—

ஆரம்ப சுகாதார நிலையம்

***54251—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?